**அன்புள்ள வாடிக்கையாளருக்கு,**

இலங்கை மத்திய வங்கியால் வெளியிடப்பட்டுள்ள நுகர்வோர் சாசனத்தின் கீழ் கோரப்பட்டுள்ள தேவையின் பிரகாரம், நாங்கள் வழங்குகின்ற உங்களுக்குத் தேவையான மற்றும் உங்களுக்குப் பொருத்தமான வங்கிக் கணக்குத் திட்டங்கள்/சேவைகளைத் தேர்ந்தெடுக்கும் போது உங்களுக்கு ஒத்துழைப்பு வழங்குவதை நோக்கமாகக் கொண்டு, முக்கியமான விடயங்கள் உள்ளடங்கிய ஆவணங்களை [KFD] நாங்கள் தயாரித்துள்ளோம்.

முக்கியமான விடயங்கள் உள்ளடங்கிய ஆவணமானது [KFD], இலங்கை ரூபாய்களை அடிப்படையாகக் கொண்ட பல்வேறுபட்ட கணக்குகள் மற்றும் கணக்குகளுடன் தொடர்புடைய விசேட பொதிகள் மற்றும் தனிப்பட்ட வங்கியியலுக்கான நேஷன்ஸ் ட்ரஸ்ட் வங்கியின் தனிப்பட்ட வெளிநாட்டு நாணயத்தை அடிப்படையாகக் கொண்ட கணக்குகள் ஆகியவை பற்றிய விரிவான அறிவை உங்களுக்கு வழங்கும்.

எவ்வாறாயினும், பின்வரும் KFD யில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களானது சட்டத்தில் மற்றும் ஒழுங்குமுறை விதிகளில் ஏற்படுகின்ற மாற்றங்கள் மற்றும் வங்கியின் கொள்கைகளிலும் நடைமுறைகளிலும் ஏற்படுகின்ற மாற்றங்கள் காரணமாக திருத்தத்திற்கு உட்பட இடமுள்ளது என்பதைக் கருத்தில் கொள்ளவும். வங்கியின் அவ்வாறான கொள்கைகள் மற்றும் நடைமுறைகளில் ஏற்படும் மாற்றங்கள் காரணமாக KFD இல் ஏதேனும் திருத்தங்கள் மேற்கொள்ளப்படுமிடத்து வங்கி அது தொடர்பாக உங்களுக்கு அறிவிக்கும் என்பதைக் கவனிக்கவும்.

உங்களுக்கு மேற்கொண்டும் தகவல் தேவைப்பட்டால், கீழே குறிப்பிட்டுள்ளவாறு www.nationstrust.com இணையதளம் ஊடாக எங்களைத் தொடர்பு கொள்ளவும். அல்லது 011 4 711 411 என்ற 24 மணி நேர துரித அழைப்பு மையத்துடன் தொடர்பு கொள்ளவும்.

கீழே கொடுக்கப்பட்டுள்ள உங்களின் ஏதும் கணக்குகள் தொடர்பான ஏதேனும் முறைப்பாடுகள் இருந்தால், முறைப்பாடுகளைக் கையாளும் அதிகாரி, நேஷன்ஸ் ட்ரஸ்ட் பேங்க் பீ.எல்.சீ, இலக்கம் 242, யூனியன் பிளேஸ், கொழும்பு 2 என்ற முகவரிக்கு முறைப்பாடு உள்ளடக்கப்பட்ட சுருக்கமான ஓர் அறிக்கையை எழுத்தில் அனுப்பி வைக்கவும். அல்லது [+94(0)114711411] எனும் தொலைபேசி இலக்கம் / [customerservice@nationstrust.com] எனும் மின்னஞ்சல் மூலம் எங்களைத் தொடர்பு கொள்ளவும். நாங்கள் உங்களுக்கு விரைவில் பதிலளிக்கத் தயாராக உள்ளோம்.

| கணக்கு பற்றிய விபரங்கள் | வாடிக்கையாளர்களுக்குக் கிடைக்கின்ற நன்மைகள் | கட்டண வகைகளும் ஏனைய வங்கி அறவீடுகளும் | ஒரு கணக்கைத் தொடங்குவதற்கு பின்பற்றப்பட வேண்டிய நடைமுறைகள் | முக்கியமான நியதிகளும் நிபந்தனைகளும் |
| --- | --- | --- | --- | --- |
| **அ) சேமிப்புக் கணக்குகள்** | | | | |
| **நேஷன்ஸ் மேக்ஸ் போனஸ் சேமிப்பு கணக்கு**<br><br>இது வட்டி செலுத்தப்படுகின்ற ஒரு கணக்கு ஆகும். இந்தக் கணக்கானது வாடிக்கையாளர்களுக்கு அவர்களால் கணக்கில் பராமரிக்கப்படுகின்ற நிலுவைக்கு போனஸ் வட்டியை செலுத்துகிறது. | • வட்டி விகிதம் ஒரு வருடத்துக்கு 2.5% ஆகும்.<br>• ரூ.100,000/- பெறுமதியான இலவச ஆயுள் காப்பீடு. மேலும், ஒரு வருடத்துக்கு ரூ. 25,000 வரை இலவசமாக உயிராபத்து நோய்க் காப்பீடு.<br>• சேமிப்பு நிலுவைக்கு இணங்க மேலதிக பற்று வசதி.<br>• கணக்கில் மேற்கொள்ளப்படும் பரிவர்த்தனைகளை அறிவிக்கின்ற குறுந் தகவல் சேவை.<br>• இந்தக் கணக்கிற்கு காலாண்டு அடிப்படையில் கணக்குக் கூற்று வழங்கப்படும்.<br>• இணைய வங்கி, மொபைல் வங்கி மற்றும் குறுந் தகவல் வங்கி வசதிகள்<br>• டெபிட் கார்ட் வசதி. | • வாடிக்கையாளரின் கணக்கு நிலுவை ரூ. 1,000 க்கும் குறைவாக இருந்தால் ரூ. 100/- கட்டணம் அறவிடப்படும்.<br><br>• கணக்கு மூடுவதற்கான கட்டணம்.<br><br>• டெபிட் கார்ட்களுக்கான வருடாந்தக் கட்டணம் மற்றும் அனைத்து நியம கொடுக்கல்வாங்கல் கட்டணங்கள்.<br><br>• வங்கியின் கட்டணங்கள் பற்றிய அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள ஏனைய நியம கட்டணங்கள் மற்றும் அறவீடுகள். | சேமிப்புக் கணக்குகளுக்கான வங்கியின் நியம கணக்கு திறப்பு படிவங்கள் பூர்த்தி செய்யப்பட்டு, பின்வரும் ஆவணங்களுடன் ஏதேனும் ஒரு நேஷன்ஸ் டிரஸ்ட் வங்கிக் கிளையில் சமர்ப்பிக்கப்பட வேண்டும்:<br><br>• தேசிய அடையாளஅட்டையின் (NIC) / செல்லுபடியாகும் கடவுச்சீட்டின் பிரதி<br><br>• தேசிய அடையாள அட்டை அல்லது கடவுச்சீட்டில் குறிப்பிடப்பட்டுள்ள வதிவிட முகவரி வேறுபடுமாக இருந்தால், முகவரியை உறுதிப்படுத்துவதற்கு எழுத்துமூல ஆவண ஆதாரம் அவசியமாகும். | **தகைமை பெறுகின்றவர்கள்:**<br>• தேசிய அடையாள அட்டை/செல்லுபடியாகும் கடவுச்சீட்டை வைத்திருக்கும் 18 வயதுக்கு மேற்பட்ட இலங்கையில் வசிக்கும் இலங்கைப் பிரஜைகள்.<br>• குறைந்தபட்ச ஆரம்ப வைப்புத் தொகை ரூ. 10,000 ஆகும்.<br>• நியம வட்டி மற்றும் போனஸ் வட்டி ஆகியவை வங்கியால் அவ்வப்போது தீர்மானிக்கப்படும் விகிதத்தில் திரட்டப்படுவதுடன், திருத்தங்களுக்கு உட்பட்டதாகும்.<br>• ஏனைய வைப்புத் திட்டங்களுக்கு அமைவாக WHT ஏற்புடையதாகும்.<br>• போனஸ் வட்டிக்கு தகுதி பெற, வாடிக்கையாளர் தனது கணக்கிலிருந்து மாதத்திற்கு ஒரு முறை மட்டுமே பணம் மீளப் பெற்றிருத்தல் வேண்டும். அல்லது மீளப் பெறுதல் எதுவும் இடம் பெற்றிருக்கக் கூடாது.<br>• காப்புறுதி அனுகூலம் மற்றும் போனஸ் வட்டிக்கு தகுதி பெற, வாடிக்கையாளர் தனது கணக்கில் ரூ. 10,000 நிலுவையை பராமரிக்க வேண்டும்.<br>• காப்புறுதி அனுகூலத்தைப் பெற, வாடிக்கையாளர் சம்பந்தப்பட்ட ஆதாரங்களுடன் அருகிலுள்ள கிளையைத் தொடர்பு கொள்ள வேண்டும்.<br>• 70 வயது வரை ஆயுள் காப்பீட்டுக்கு தகுதி பெறுவதுடன், உயிராபத்து நோய்க் காப்பீட்டுக்கு தகுதி |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | | பெறுவது 60 வயது வரை மட்டுமேயாகும். |

- இங்கு உள்ளடக்கப்பட்டுள்ள குறிப்பிட்ட நியதிகள் மற்றும் நிபந்தனைகளுக்கு மேலதிகமாக**,** அனைத்து பொதுவான நியதிகள் மற்றும் நிபந்தனைகளும் நேஷன்ஸ் மேக்ஸ் போனஸ் சேமிப்பு கணக்கிற்கு ஏற்புடையதாகும் என்பதுடன் முறைப்பாடுகளைக் கையாளும் நடைமுறைகளானது பொதுவான வியாபார நிபந்தனைகளின் கீழுள்ள https://www.nationstrust.com/images/pdf/general-business-conditions pdf இல் குறிப்பிடப்பட்டுள்ளது.
- அவ்வப்போது திருத்தத்திற்கு உட்படும் கட்டண வகைகள் மற்றும் வங்கியின் ஏனைய கட்டணங்கள் ஆகியன வங்கியின் உத்தியோகபூர்வ இணையதளத்தில் வெளியிடப்படும்.
- இந்த வங்கியானது**,** ரூ. 1,100,000/- வரை வைப்பிலிடுகின்ற ஒரு வைப்பீட்டாளருக்குப் பாதுகாப்பு வழங்குகின்ற இலங்கை மத்திய வங்கியின் (CBSL) கீழ் இயங்குகின்ற இலங்கை வைப்புக் காப்புறுதித் திட்டத்தின் (SLDIS) ஓர் உறுப்பினராகும்.
- இந்த ஆவணத்தின் ஆங்கில, சிங்கள மற்றும் தமிழ்ப் பிரதிகளுக்கு இடையில் ஏதேனும் முரண்பாடுகள் காணப்பட்டால், இதன் ஆங்கிலப் பிரதியே செல்லுபடியானதாகக் கருதப்படும்.